# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**13.08.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

# மாநில செய்திகள்

## 1. வெளிச்சந்தையில் தமிழக அரசின் புதிய உப்பு விற்பனை

- வெளிச்சந்தைகள் தமிழக அரசு புதிய உப்பு விற்பனை செய்யப்பட உள்ளது.
- **நெய்தல்** என பெயரிடப்பட்டுள்ள இந்த உப்பினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிமுகம் செய்து வைத்தார்.
- **உப்பளத் தொழிலாளர்கள்:**
  - உப்பு உற்பத்தி பாதிக்கப்படும் காலங்களில் உப்பளத் தொழிலாளர்களின் சிரமத்தைப் போக்க ஆண்டுக்கு ஒருவருக்கு தலா ரூபாய் 5000 வழங்கப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது.
  - இந்த அறிவிப்பை செயல்படுத்தும் வகையில் உப்பு உற்பத்தி இல்லாத **அக்டோபர் முதல் டிசம்பர்** மாதங்கள் வரையிலான காலத்தில் ரூபாய் 5000நிவாரண தொகை வழங்கப்பட உள்ளது.
  - இந்தத் திட்டத்தையும் முதல்வர் மு.க.ஸ்டாலின்தொடக்கி வைத்தார்.

## 2. எட்டயபுரத்தில் 75 ஆவது ஆண்டு சுதந்திர தின அமுதப் பெருவிழா கொண்டாட்டம்

- **தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில்** மத்திய அரசின் சார்பில்75 வது ஆண்டு சுதந்திர தின அமுதப் பெருவிழா மற்றும் வீடு தோறும் தேசிய கொடியை ஏற்றும் விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சி நடைபெற்றது.
- ஓராண்டுக்குள் **75 வந்தே பாரத் ரயில்கள்** இயக்கப்படும்.
- அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்துக்குள் நாடு முழுவதும் 75 வந்தே பாரத் ரயில்களை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் **அஸ்வினி வைஷ்ணவ்** தெரிவித்துள்ளார்.
- சென்னை பெரம்பூர் ஐசிஎஃப் வளாகத்தில் முதல் முறையாக உள்நாட்டு தொழில்நுட்பத்தில் ரூபாய் 97 கோடி செலவில் **'ரயில்180 '** என்னும் அதிநவீன விரைவு ரயில் தயாரிக்கப்பட்டது.
- மணிக்கு 180 கிலோமீட்டர் வேகத்தில் செல்லும் இந்த அதிவேக ரயிலுக்கு **'வந்தே பாரத் எக்ஸ்பிரஸ்'** என்று பெயரிடப்பட்டு புதுடில்லி வாரணாசி புதுடில்லி வைஷ்ணவ தேவி இடையே இயக்கப்பட்டு வருகின்றன.
- நாட்டின் 75 ஆவது சுதந்திர தினம் கொண்டாடும் இந்த தருணத்தில் வரும் **2023 ஆம் ஆகஸ்ட்க்குள்** 75 வந்தே பாரத் ரயில்களை நாடு முழுவதும் இயக்க ரயில்வே துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

## 3. 10,500 உலமாக்களுக்கு சைக்கிள் அளிக்கும் திட்டம்

- **உலமாக்களுக்கு சைக்கிள்கள் வழங்கும் திட்டத்தை** முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.
- தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் சைக்கிள்களை அவர் வழங்கினார்.
- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் உலமாக்கள், பணியாளர்கள் நலவாரிய உறுப்பினர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## 4. 32 வதுயானைகள் காப்பகம்

- நாட்டில் உள்ள 31 யானைகள் காப்பகங்களோடு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அகத்தியர் மலை 32 வது காப்பகமாக சேர்க்கப்படுவதாக மத்திய சுற்றுச்சூழல் வனம், பருவநிலை அமைச்சர் பூபேந்திரயாதவ் தெரிவித்தார்.
- 2017ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி நாட்டில்29 , 964யானைகள் உள்ளன.

- தமிழ்நாட்டின் ஐந்தாவது யானைகள் காப்பகமாக திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அகத்தியர் மலை அறிவிக்கப்பட்டிருக்கிறது.
- மேலும் மேற்கு தொடர்ச்சி மலை பிரச்சனையில் கஸ்தூரி ரங்கன் காட்கில் கமிட்டிகள் அறிக்கையை முழுமையாக அணுக மக்களின் கருத்துக்களை பரிசீலிக்க ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

## மத்திய செய்திகள்

### 1. போலி ஆவணப்பதிவு ரத்துசட்டத்திருத்தம்: குடியரசுத் தலைவர் ஒப்புதல்

- மோசடியான ஆவண பதிவுகளை ரத்து செய்ய பதிவுத்துறைக்கு அதிகாரம் அளிக்கும் சட்ட திருத்தத்திற்கு குடியரசு தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்.
- மோசடி, ஆள்மாறாட்டம் போன்ற காரணங்களுக்காக பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை ரத்து செய்ய அதிகாரம் அளிக்கும் வகையில் சட்டப்பேரவையில், **2021ஆம் வருடம் செப்டம்பர்** மாதத்தில் மசோதா நிறைவேற்றப்பட்டது.
- திருத்தப்பட்ட இந்த பதிவு சட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட **பிரிவு 22 பி பிரிவானது** போலி ஆவணங்கள் மற்றும் சட்டத்தால் தடை செய்யப்பட்ட ஆவணங்களில் பதிவினை மறுக்க பதிவு அலுவலர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.
- மேலும் **பிரிவு77 ஏ பிரிவானது** நில அபகரிப்பு செய்து மோசடியாக ஆவணப்பதிவு செய்யப்பட்டது என மாவட்ட பதிவாளர்களால் புகார் மனுக்கள் பெறப்பட்டால் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களை விசாரித்து மோசடி ஆவணம் என கண்டறியப்பட்டால் அந்த ஆவணத்தை ரத்து செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 2. ஆசியயானைகளில் 60% இந்தியாவில் தான் உள்ளன

- **சர்வதேச யானைகள் தினத்தை** முன்னிட்டு யானைகளை பாதுகாக்கும் முயற்சிக்கு பாராட்டு தெரிவித்த பிரதமர் மோடி ஆசியாவில் **60 சதவீத** யானைகள் இந்தியாவில் தான் இருப்பதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.
- யானைகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்த **2012 ஆகஸ்ட் 12 முதல் சர்வதேச யானைகள் தினமாக** கொண்டாடப்படுகிறது.
- **தாய்லாந்தில்** இந்த தினம்முதல்முறையாக தொடங்கப்பட்டது.

### 3. வாடகை வீட்டுக்கு ஜிஎஸ்டி கிடையாது

- தனிநபர்கள் பயன்படுத்தும் வீடுகளின் வாடகைக்கு **சரக்கு-சேவை வரி** (ஜிஎஸ்டி) கிடையாது என்று மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.
- அதே நேரத்தில் வர்த்தகப் பயன்பாட்டுக்காக வீடுகளை வாடகைக்கு விட்டால் அதற்கு ஜிஎஸ்டி உண்டு என்று கூறப்பட்டுள்ளது.
- இதற்கு முன்பு **வர்த்தக பயன்பாட்டுக்கான** கடைகள் கட்டிடங்களுக்கு மட்டும் ஜிஎஸ்டி விதிக்கப்பட்டு வந்தது.

## விளையாட்டு செய்திகள்

### 1. வாள் வீச்சு சாம்பியன்ஷிப் இந்தியாவுக்கும் மேலும் 4 பதக்கங்கள்

- இங்கிலாந்தில் நடைபெறும் காமன்வெல்த் வாள் வீச்சு சாம்பியன்ஷிப் இந்திய ஆடவர் எபீ அணி தங்கப்பதக்கம் வென்றது.
- **உதய்வீர் சிங், சுனில் குமார், ஜெட்லி சிங், எஸ்.என்.சிவா** ஆகியோர் பதக்கம் வென்றனர்.

### 2. மாற்றுத் திறனாளிகளுக்கான பாரா போட்டி

- **ராகவேந்திரா** வெள்ளி பதக்கம் வெல்ல, அதே பிரிவில் **தேவேந்திர குமார்** வெண்கல பதக்கம் பெற்றார்.